அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :118/2017

தேதி : 21/10/2017

பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் உள்ளிட்ட ஊடகங்கள் கருத்துச் சுதந்திரத்தின் களஞ்சியங்கள். தனிநபர் தாக்குதல் விமர்சனங்கள் தவிர்த்து, பிற அனைத்தையும் தெரிவிக்கவும், விமர்சிக்கவும் உரிமை கொண்டவை.

அந்த வரிசையில், திரைப்படங்களுக்கும் கருத்துச் சுதந்திரத்தோடு, சமூக அக்கறையையும் பிரதிபலிக்கவேண்டிய தன்மையும், தகுதியும் உள்ளன.

மது, ஊழல், அரசியல் அவலங்கள், தீவிரவாதம், சாதிக்கொடுமை, வரதட்சணை, வறுமை போன்ற பல்வேறு தீமைகளுக்கும் எதிரான கருத்துகளோடு பல்வேறு திரைப்படங்கள் வெளிவந்து ரசிகர்களாலும், பொதுமக்களாலும் பெருமளவில் வரவேற்பைப்பெற்றுள்ளன.

தற்சமயம் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் “மெர்சல்” என்ற திரைப்படத்தின் சில காட்சிகள் ஜிஎஸ்டி, பண மதிப்பிழப்பு நடவடிக்கை போன்ற மத்திய அரசின் திட்டங்களை விமர்சிப்பதாக இருப்பதால், அக்காட்சிகள் நீக்கப்படவேண்டும் என்ற அரசியல் அழுத்தம் தரப்படுகிறது என அறிகிறேன்.

முதலாவதாக, இத்திரைப்படம் முற்றிலும் ஜிஎஸ்டி, பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு எதிரான கதையம்சம் கொண்டதல்ல. வேறு கதையம்சம் கொண்ட திரைப்படத்தில் ஒரு காட்சியில் மட்டுமே இவை விமர்சிக்கப்பட்டுள்ளன. இது தேசத்துரோக குற்றமாக தெரியவில்லை.

இரண்டாவதாக, ஜிஎஸ்டி, பண மதிப்பிழப்பு நடவடிக்கைகளை பாஜக வின் முன்னாள் நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா உள்ளிட்ட நிர்வாகிகளும், பல பொருளாதார அறிஞர்களும், ஊடகங்களும், வணிக அமைப்புகளும், ஏற்றுமதியாளர்களும், பொது மக்களும் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள். இப்படி விமர்சனம் செய்துவருபவர்களை நடவடிக்கை எடுத்து தண்டிக்கவேண்டும் என்று அரசு விரும்புகிறதா?

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மூன்றாவதாக, முகநூல், வாட்ஸ்ஆப் போன்ற சமூக வலைத்தளங்களில் இத்திட்டங்கள் குறித்த கோடிக்கணக்கான மீம்ஸ்கள் போன்ற கருத்துப் பதிவுகள் வந்தவண்ணம் இருப்பது அரசுக்கும், பாஜகவுக்கும் தெரியாதா? இவற்றின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

நான்காவதாக, இத்திரைப்படத்தின் சர்ச்சைக்குரியதாகச் சொல்லப்படும் காட்சி, மேற்சொன்ன ஊடகங்களின் மூலம் திரைப்படம் பார்க்காத லட்சக்கணக்கானவர்களைச் சென்றடைந்துவிட்டதே. என்ன செய்யப் போகிறார்கள்?

அதுமட்டுமல்லாது தணிக்கை குழுவால் சான்றிதழே வழங்கப்பட்டு ஒரு திரைப்படம் வெளிவந்தபிறகு, அதை மீண்டும் மறு தணிக்கைக்கு உட்படுத்துவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது.

அதுதவிர, ஜிஎஸ்டி பற்றி பல்வேறு தரப்பினர்களும் எதிர் கருத்து தெரிவித்து இருக்கும் போது, இது பற்றிய வசனங்கள் இடம்பெற்றிருப்பதில் தவறில்லை.

முதலில் மத்திய அரசும், பாஜகவும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார தொய்வு நிலையைச் சீர்படுத்துவதில் கவனம் செலுத்தட்டும். விமர்சனங்களை ஆக்கப்பூர்வமாக எதிர்கொள்ளட்டும். எனவே, இதுபோன்ற எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாத சிறுசிறு விஷயங்களில் கவனம் செலுத்தவதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, மெர்சல் திரைப்பட விவகாரத்தில் தேவையற்ற அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதற்கு, திரைப்படத்துறை சார்ந்தவன் என்ற முறையில் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com